# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032**
**முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ),**

**முறையீட்டு மனு எண்.1152/2016/பே**

**ஆணை எண். 30/2018, நாள்.19 –02–2018**

**திரு ஆர். சிலம்பரசன்,**
**கோழியூர் கிராமம்,**
**திட்டக்குடி வட்டம்,**
**கடலூர் மாவட்டம்.** — **முறையீட்டு மனுதாரர்,**

**செயல் அலுவலர்,**
**திட்டக்குடி பேரூராட்சி,**
**கடலூர் மாவட்டம்.** — **எதிர் மனுதாரர்.**

**ஆணை**

திரு ஆர். சிலம்பரசன், த/பெ திரு ராதாகிருஷ்ணன், கோழியூர் கிராமம், திட்டக்குடி வட்டம், கடலூர் மாவட்டம் என்பவரின் 09.11.2016ம் நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தால் 15.11.2016 அன்று பெறப்பட்டு 1152/2016 எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் முறையீடு பரிசீலிக்கப்பட்டு கீழ்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

முறையீட்டு மனுதாரர் திரு. ஆர். சிலம்பரசன் என்பவர், தனது உரிய படிவத்திலான முறையீட்டு மனுவுடன், 15.10.2016 நாளிட்ட ஊழல் மற்றும் கண்காணிப்புத்துறை இயக்குநருக்கு முகவரியிட்ட தனது மனுவினையும், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இயக்குநரின், 25.10.2016ம் நாளிட்ட கடித எண் 8167/2016 நாள் 25.10.2016 ன் நகலினையும் இணைத்து இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார். ஊழல் மற்றும் கண்காணிப்புத்துறைக்கு முகவரியிட்ட கடிதத்தில் கடலூர் மாவட்டம், திட்டக்குடி பேரூராட்சி குறித்து கீழ்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்.

திட்டக்குடி பேரூராட்சி நிர்வாகத்தால் கோழியூர் கிராமத்திலிருந்து (மெயின் ரோட்டிலிருந்து) 1 கிலோ மீட்டர் அளவுக்கு ரூ.1.00 கோடி மதிப்பீட்டில் தார்ச்சாலை அமைக்கப்பட்டதாகவும் மேற்படி தார்ச்சாலை தரமான பொருட்களை கொண்டு அமைக்கப்படாததால், சாலை சேதமடைந்துள்ளது எனவும், சாதாரணமாக இரு சக்கர வாகனம் சென்றாலும் சாலை பெயர்ந்து விடுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக இச்சாலைப்பணியினை மேற்கொண்ட ஒப்பந்தக்காரர், மற்றும் அதிகாரிகள் மீது ஊழல் தடுப்பு சட்டத்தின் கீழ் நடவடிக்கை எடுக்குமாறு தெரிவித்து தனது மனுவினை சமர்ப்பித்துள்ளார். ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இயக்குநர், அவர்களது 25.10.2016 நாளிட்ட கடிதத்தில் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ சட்டம் 2014ன்படி இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்து கொள்ளுமாறு மனுதாரருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இம்முறைமன்ற நடுவ 21.11.2016 ம் நாளிட்ட அறிவிப்பாணை மூலம் மேற்படி முறையீட்டு மனுதாரரின் புகார்களுக்கு விளக்கம் அளிக்கக் கோரி பேரூராட்சி செயல் அலுவலர், திட்டக்குடி அவர்களுக்கு ஆணையிடப்பட்டது. மேலும் இம்முறைமன்ற நடுவ அழைப்பாணை எண் 1152/2016/பே/ நாள் 21.11.2016 ல் 28.12.2016 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் விசாரணைக்கு ஆஜராகுமாறு முறையீட்டு மனுதாரருக்கு ஆணையிடப்பட்டது.

அதன்படி 28.12.2016 ல் ஆஜரான முறையீட்டு மனுதாரர் மனுவில் குறிப்பிட்டுள்ள புகார் சம்பந்தமாக தனது தரப்பு வழக்கறிஞர் மூலம் சொல்ல விரும்புவதாக தெரிவித்தார். மனுதாரர் தரப்பு வழக்கறிஞர்களது வக்காலத்து படிவங்களும் சமர்ப்பிக்கப்பட்டன.

முறையீட்டு மனுவிற்கான விளக்க அறிக்கை திட்டக்குடி பேரூராட்சி செயல் அலுவலரின் கடித ந.க.எண். 52/2016/அ.1/நாள் 15.12.2016 ன் மூலம் பெறப்பட்டது.

இந்நிலையில் முறையீட்டு மனுதாரர் இப்பொருள் தொடர்பாக ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறையில் 11.01.2017ல் அளித்துள்ள புகார் தொடர்பாக மாண்பமை சென்னை உயர்நீதி மன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு எண் Crl.O.P No.14798/2017 ல் மேற்படி மனுவினை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை பதிவு செய்து விசாரணை மேற்கொள்ள மாண்பமை உயர்நீதி மன்றத்தால் 27.07.2017 அன்று ஆணையிடப்பட்டுள்ளது. மனுதாரரது 11.01.2017 நாளிட்ட ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறைக்கு முகவரியிட்ட மனுவின் நகல் மேற்படி துறையிலிருந்து கோரி பெறப்பட்டு இம்முறைமன்ற நடுவத்தால் பரிசீலிக்கப்பட்டது. இம்மனுவில் குறிப்பிட்டுள்ள புகார்களும் மனுதாரரது 09.11.2016ம் நாளிட்ட மனுவில் குறிப்பிட்டுள்ள புகார்களும் ஒரே பொருள் தொடர்பானவையே ஆகும். நீதி மன்ற ஆணையின்படி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறையினரால் மனுதாரரது மனு ந.க.எண். 170/2017/RDP/CL/ன் மூலம் பதிவு செய்யப்பட்டு விசாரணையில் உள்ளதாக ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை இயக்குநரின் கடித எண் 497/2017/TP/CL/Dated. 05.01.2018 ன் மூலம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே நீதிமன்ற ஆணைகளின்படி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத் துறை விசாரணைக்குட்படுத்தப்பட்டுள்ள இப்பொருட்பாடு குறித்து, 2014-ஆம் ஆண்டு தமிழ்நாடு

உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டம் பிரிவு 10 (3) (b) ன்படி, இம்முறைமன்ற நடுவ விசாரணை நடவடிக்கைகள் கைவிடப்படுகிறதென தெரிவித்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2018 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 19 –ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//–

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

–//உத்திரவின்படி – அனுப்பப்படுகிறது//–

பெறுநர்
திரு ஆர். சிலம்பரசன்,
கோழியூர் கிராமம்,
திட்டக்குடி வட்டம்,
கடலூர் மாவட்டம்.

செயல் அலுவலர்,
திட்டக்குடி பேரூராட்சி,
கடலூர் மாவட்டம்.

செயலாளர்.

நகல்
1.பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
ரேூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலகம், கடற்கரை சாலை,
கடலூார்.

2.இயக்குநர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணப்புத்துறை இயக்குநரகம்,
எம்.கே.என்.ரோடு, ஆலந்துார், சென்னை – 600 016